கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, திருகோணமலை.
නැගෙනහිර පළාත් රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව, ත්‍රිකුණාමලය.
PROVINCIAL PUBLIC SERVICE COMMISSION, EASTERN PROVINCE, TRINCOMALEE.

உமது இல / ඔබේ අංකය / Your No

எனது இல / මගේ අංකය / My No } EP/07/08/E.B/Pro.Asst/2009

09.06.2009.

அமைச்சுச் செயலாளர் / பணிப்பாளர் /
ஆணையாளர் / பிரதேச செயலாளர் /
மாநகர சபை ஆணையாளர் / வலயக் கல்விப் பணிப்பாளர் /
நகரசபைச் செயலாளர் / பிரதேசசபைச் செயலாளர்

**பட்டதாரி வேலைத்திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்து புதிய பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான Iவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2009**

மேற்படி வினைத்திறமைகான் தடைப்பரீட்சையை 2009, யூலை ன் மாதத்தில் நடாத்துவதற்கு எம்மால் நடவடிக்கைகள் மேற்கொள்கொள்ளப்பட்டுள்ளது. இப்பரீட்சை தொடர்பாக இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் விபரங்களை தங்கள் அமைச்சு/திணைக்களத்தில் கடமையாற்றும் தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு அறியத்தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்வதுடன் **2009.06.30**ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைப் பெற்று தங்கள் சிபார்சுடன் எனக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கே.உடகே,
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்.


**தொலை பேசி / දුරකතන / Telephone**
தொலைநகரி / ෆැක්ස් / fax : 026-2222174
செயலாளர் / ලේකම් / Secretary : 026-2222823
mYtyfk; / කාර්යාලය / Office : 026-2220092
மின்அஞ்சல் / e-mail : ppscnep@sltnet.lk

198> உட்துறைமுக வீதி, திருக்கோணமலை.
198> ඇතුල්වරාය පාර, ත්‍රිකුණාමලය
198> Inner Harbour Road, Trincomalee.

## பட்டதாரி வேலைத்திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்து புதிய பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான Iவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2009

பட்டதாரி வேலைத்திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்து புதிய பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்ட கீழ்குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு Iஆம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு விண்ணப்பங்கள் எம்மால் கோரப்படுகின்றது.

பரீட்சைக்குரிய பதவிகள்

1. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - மனிதவளம்
2. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - நிதி
3. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - தொழில்நுட்பம்
4. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - விவசாயம்
5. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - கால்நடை அபிவிருத்தி
6. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - தகவல் தொழில்நுட்பம்
7. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - பொது அபிவிருத்தி
8. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - நிலப்பயன்பாடு
9. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - உள்ளூராட்சித் திணைக்களம்
10. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - மக்கள் தொடர்பாடல்
11. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - சட்டம்
12. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - உளவியல்
13. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - சூழல்
14. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - கல்வி
15. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - புள்ளிவிபரம்
16. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - மொழிபெயர்ப்பு
17. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - கடற்தொழில்
18. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - சுகாதாரமும் சத்துணவும்
19. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - மகளிர் சிறுவர்
20. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - சுதேச மருத்துவம்
21. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - தருணஅருண

02. **தகைமைகள் :**
இப்பரீட்சைக்கு தோற்றும் சகல விண்ணப்பதாரிகளும் பட்டதாரி வேலைத்திட்டத்தின் கீழ் நிரந்தர பதவி வகிக்கும் மாகாண சபை உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

03. **மொழிமூலம் :-** இப்பரீட்சை தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி ஒருவர் சகல பாடங்களிலும் ஒரே மொழியிலேயே தோற்ற வேண்டும். எக்காரணம் கொண்டும் மொழிமூலம் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

04. **பாடத்திட்டம்**
இப்பரீட்சை இரு வினாத்தாள்களை கொண்டதாக இருக்கும். இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்வருமாறு

**முதலாவது வினாத்தாள்**
பாட இலக்கம் 01 :- தாபன விதிக் கோவையும் நிதி பிரமாணங்களும்

***தாபன விதிக்கோவை***

தாபன விதிக்கோவையின் முதலாம் பிரிவில் I, II,VII,XII,XIV அத்தியாயங்கள்

அத்துடன் தாபன விதிக் கோவை IIஆம் பிரிவில் உள்ள சகல அத்தியாயமும்

***நிதி பிரமாணங்கள்***
நிதிப்பிரமாணங்கள் III,IV,V அத்தியாயங்கள்

**இரண்டாவது வினாத்தாள்**
பாட இலக்கம் 02 :- அரசியல் யாப்பும், மாகாண சட்ட விதிகளும்.

1. அரசியல் யாப்பும் அதன் 13ம் திருத்தங்களும். (Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka with special attention to 13th amendement to the constitution)
2. மாகாண சபை பிரமாணங்களும் அதன் திருத்தங்களும். (Provincial Council act and amendement)
3. இடைநேர் விளைவான கட்டளைச் சட்டங்கள் (Consquential provisions act)
4. மாகாண சபை சட்டங்களும், பிரமாணங்களும். (Provincial Council policy and regulations)
5. மாகாண சபையின் கட்டமைப்பின் பணிவெளியுரை அதிலான பல்வேறு மட்டநிலைகள், பொறுப்புக்களும் பணிகளும். (Provincial Council organisational structure and the duties and responsibilities vested with various levels and institutions therein)

அலுவலர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்றலாம். எனினும் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கு எரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதத்தினைப் பெற்றுகொள்ள வேண்டும்.

05. பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சாத்திகளது பெறுபேறுகள் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் அனுப்பிவைக்கப்படும்.

06. விண்ணப்பம், இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திகேற்ப தமது விண்ணப்பங்களை தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தமது திணைக்களத்தலைவா் ஊடாக **2009.06.30**ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக “செயலாளா், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், பிரதம செயலாளா் செயலகம், இல. 198, உட்துறைமுக வீதி, திருகோணமலை”எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் முலையில் பரீட்சையின் பெயரை குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னா் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

07. முதல் தடவையாக இப்பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை, எனினும் அடுத்த தடவையாக பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரிகள் ஒரே தடவையில் முழுப்பரீட்சை தோற்றுவதாயின் பரீட்சை கட்டணமாக 90 ரூபாவும் ஒரு பாடத்துக்கு தோற்றுவதாயின் 50 ரூபாவும் வதியும் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளா் அவா்களின் வைப்பு கணக்கில் செலுத்தியதற்கான செலுத்தி சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

08. பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு:-

| நகரம் | நகர எண் |
|---|---|
| திருகோணமலை | 6 |
| மட்டக்களப்பு | 7 |
| அம்பாறை | 8 |
| கல்முனை | 9 |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்

09. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடா்பாகவும் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரின் தீா்மானம் இறுதித் தீா்மானமாகும்.

கே.உடகே,
செயலாளா்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்.

மாதிரி விண்ணப்பபடிவம்

## பட்டதாரி வேலைத்திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்து புதிய பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான Iவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2009

சுட்டெண் [ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் [ ]
சிங்களம் - S
தமிழ் - T
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

01. (அ) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :- ..........................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
(ஆ) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :- ..........................................................................
(சிங்களத்தில் / தமிழில்)

02. அலுவலக முகவரி :- ..........................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

03. பால் ஆண் M / பெண் F [ ]

04. தேசிய ஆளடையாள அட்டையின் இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

05. சேவையின் விபரம் :
(அ) தற்போது வகிக்கும் பதவி : ..........................................................................
(ஆ) நியமனக்கடிதத்தின் இலக்கமும், திகதியும் :..........................................................................
(இ) முதல் நியமனத் திகதி :- ..........................................................................
(ஈ) தற்போதைய வருடாந்த சம்பளம் : ..........................................................................

06. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் நகரம் : [ ]
(அறிவித்தலின் 07ஆம் பந்தியின் பிரகாரம்)

07. இப்பரீட்சையில் தோற்றவிருக்கும் பாடம் / பாடங்கள் :

| இல | புாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |

08 நீங்கள் பரீட்சைக்கு முதன்முதலாக தோற்றுகின்றீர்களா ? ..........................................................................
பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் இலக்கம்.: ..........................................................................
பற்றுச்சீட்டு பெற்றுக் கொண்ட பிரதேச செயலகம் : ..........................................................................
திகதி :- ..........................................................................

பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்

[ ]

9. விண்ணப்பதாரியின் உறுதியரை
மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும் மேலே காட்டப்பட்டுள்ள அதே மொழியில் அப்பரீட்சைக்குத் தோ்றி விடையளிப்பதற்கு நான் தகுதியுடையவனென்றும், எவ்விதத்திலானதொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகவில்லை என்றும் நான் வெளிப்படுத்துகிறேன். இப்பரீட்சைக்காக செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுக இத்தால் உடன்படுகின்றேன்.

திகதி : ................................

..........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

10. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு/திருமதி/செல்வி......................................... கிழக்கு மாகாண அரச சேவை உத்தியோகத்தர் என்பதையும், இவரின் சேவையையும், நன்னடத்தையும் திருப்திகரமானதென்றும், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் இவ்வலுவலக அறிக்கை மூலம் நான் தனிப்பட்ட முறையில் பரிசீலனை செய்துள்ளேன் என்பதையும், அவை சரியானவை எனவும் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு சகல தகைமைகளும் பூர்த்தி செய்துள்ளார் எனவும், உறுதிப்படுத்துகின்றேன்

..........................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்

பெயர் : .................................................
பதவிப் பெயர் : .........................................
முகவரி : ................................................
திகதி : ..................................................